நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# பல் பிடுங்கிய விவகாரம்: ஐஏஎஸ் அமுதாவிடம் 11 பேர் சாட்சியம்

Published On : 18th April 2023 04:40 AM | Last Updated : 18th April 2023 04:40 AM

விசாரணைக்கு வந்தவர்களின் பற்களைப் பிடுங்கி காவல் துறையினர் துன்புறுத்தியது தொடர்பான வழக்கின் உயர்நிலை விசாரணை அதிகாரியான பெ.அமுதாவிடம், பாதிக்கப்பட்ட 11 பேர் திங்கள்கிழமை சாட்சியம் அளித்தனர்.

அம்பாசமுத்திரம் உட்கோட்டத்திற்குள்பட்ட காவல் நிலையங்களில் விசாரணைக்காக வந்தவர்களை காவல் உதவிக் கண்காணிப்பாளர் பல்வீர் சிங் பற்களைப் பிடுங்கி துன்புறுத்தியதாகப் புகார் எழுந்தது. இதுகுறித்து தமிழக அரசால் உயர்நிலை விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள, ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் பெ.அமுதா விசாரணை நடத்தி வருகிறார். அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இரண்டாம் கட்டமாக திங்கள்கிழமை விசாரணையைத் தொடங்கினார்.

காவல் துறையினர் பற்களைப் பிடுங்கி துன்புறுத்தியதால் பாதிக்கப்பட்ட சிவந்திபுரம் பகுதியைச் சேர்ந்த செல்லப்பா, மாரியப்பன், இசக்கிமுத்து, இ.மாரியப்பன், சந்தோஷ், வேதநாராயணன், தூத்துக்குடியைச் சேர்ந்த கணேசன், விக்கிரமசிங்கபுரம் அருண்குமார், சுபாஷ் மற்றும் இரண்டு சிறுவர்கள் உள்பட 11 பேர் சாட்சியம் அளித்தனர். மேலும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மக்கள் கண்காணிப்பகம் அமைப்பின் இயக்குநர் வழக்குரைஞர் ஹென்றி திபேன், வழக்குரைஞர் மகாராஜன் ஆகியோர் ஆஜராகி மனு அளித்தனர்.

**பின்னர் வழக்குரைஞர் ஹென்றி திபேன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:**
அம்பாசமுத்திரம் காவல் உதவி கண்காணிப்பாளராக இருந்த பல்வீர்சிங் விசாரணைக்காக வந்தவர்களிடம் வார்த்தையில் கூற முடியாத அளவுக்கு கொடூர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து செய்தி வெளியானதும் மாவட்ட ஆட்சியர் உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார். அதோடு, சார்ஆட்சியர் விசாரணை நடத்தியதும் ஏற்புடையதல்ல. காவல் நிலையங்களில் கண்காணிப்புக் கேமிராக்கள் செயல்படுவதை ஆட்சியர் கண்காணிப்பது அவசியமானது. அதிலும் திருநெல்வேலி ஆட்சியர் கவனம் செலுத்தவில்லை.

பல்வேறு அழுத்தங்களுக்குப் பிறகே, ஏஎஸ்பி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதோடு நிறுத்திவிடாமல், அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். மேலும் இந்த வழக்கை ஐஜி அந்தஸ்தில் உள்ள நேர்மையான அதிகாரிகளைக் கொண்டு முறையாக விசாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உயர்நிலை சிகிச்சை வழங்க வேண்டும் என்றார்.

https://www.dinamani.com/all-editions/edition-thirunelveli/thirunelveli/2023/apr/18/tooth-extraction-case-11-poh-testifies-to-ias-officer-amuda-3992909.html